# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/6 - 2016 දෙසැම්බර් මස 05 වැනි සඳුදා - 2016.12. 05

1996/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ஐஎம்டீஎஸ்/காணி/05/சுவீ/25/2005(13).

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில், கடவத்தை கொறளை சீலாகம கிராம அலுவலர் பிரிவில் உள்ள, புவக்கசராவ கிராமத்தில் அமைந்துள்ள, இரத்தினபுரி கிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட, 2011.12.14 ஆம் திகதிய இறுதி கிராம வரைபடம் 563, பிற்சேர்க்கை இல. 07 இல் துண்டு இல. 161 இல் விபரிக்கப்பட்டுள்ள ஒரு (01) காணித் துண்டு.

1. **துண்டு இல. 161**

காணியின் பெயர்: உடஹாவளவுவேவத்தை அலியஸ் புவக்கசராவகொட வத்தை; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டபிள்யூ. எம். கிரிபண்டார, சீலாகம, பெலிகுலோயா; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு இம்புல்பே பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும், குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ.பீ.ஜீ.ரேணுகா,
பிரதேச செயலாளர் (பதில்),
காணி எடுத்துக் கொள்ளல் அதிகாரி,
இம்புல்பே.

பிரதேச செயலகம்,
இம்புல்பே,
2016, நவெம்பர் 30.

12 - 797